ආරක්ෂක අමාත්‍යාංශය
பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF DEFENCE
ආරක්ෂක මූලස්ථාන සංකීර්ණය, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, ශ්‍රී ලංකාව.
பாதுகாப்பு தலைமையக கட்டிடம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.
Defence Headquarters Complex, Sri Jayawardenepura, Kotte, Sri Lanka. Website : www.defence.lk

මගේ අංකය / எனது இல / My No: MOD/MD/08 (44)
ඔබේ අංකය / உமது இல / Your No:

තැ. පෙ. / த. பெட்டி / P.O. Box: 572
දුරකථන / தொலைபேசி / Telephone: 2430860-9, 2430870-8
ලේකම් / செயலாளர் / Secretary: දු./தொ./Tel. : 011 2381154; ෆැක්ස්./பெ./Fax.: 011 2541529; වි. තැපැල./மி.அ./Email : secdefence@defence.lk
දිනය / திகதி / Date: 17 செப்டம்பர் 2021

பிரதம ஆசிரியர் / செய்தி பணிப்பாளர்

**<u>பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை</u>**

1. பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இந்த ஊடக அறிக்கையானது தங்களது உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி மற்றும் பெக்ஸ் இலக்கத்திற்கு ஈ மெய்ல் மற்றும் பெக்ஸ் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையை தங்களது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவத்தின் ஊடாக பிரசுரித்தும்ஃ ஒலி/ஒளிபரப்பு செய்து முழுமையான பிரச்சாரத்தை பெற்றுத்தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

3. நன்றி

**நளின் ஹேரத் ஆர்எஸ்பி**
லெப்டினன்ட் கேர்ணல்
கடமை நிறைவேற்று பணிப்பாளர் - ஊடகம்
பாதுகாப்பு அமைச்சு

**<u>ஊடக அறிக்கை</u>**

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் பாணியில் கிடைக்கப்பெற்றதாக கூறப்படும் போலி மின்னஞ்சல் தொடர்பில் பொது மக்கள் வீணாக அச்சமடைய தேவையில்லை என்று பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) தெரிவித்தார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்ட பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, நாட்டிலுள்ள சகல பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்க பிரிவினர்களும் தற்போதுள்ள அமைதியை சீர்குலைக்க எவருக்கும் வழிவகுக்காமல் தத்தமது கடமைகளை திறம்பட முன்னெடுத்து வருகின்றனர் என்றார்.

இதேவேளை, கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் தனிப்பட்ட நலனை எதிர்பார்த்து கைக்குண்டொன்றை வைத்த இரண்டு சந்தேக நபர்கள் தற்போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.